

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் பாரிமுனையில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நேற்று முன்தினம் பங்கேற்று 300 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி – 300 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை & உபகரணங்கள் – அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 250 பேருக்கு தையல் எந்திரங்கள் – Tally பயிற்சி முடித்தோருக்கு 170 Laptop & Certificates என நலத்திட்ட உதவிகள் மற்றும் சென்னை தீவுத்திடலில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்த விழாவில், ஆட்டோ ஓட்டும் தோழர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் புதிய ஆட்டோக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரத்தோடு கூடிய வண்டிகள், கழக மகளிருக்கு ஸ்கூட்டர்ஸ் சிற்றுண்டி உணவகம் நடத்த வண்டிகள், உழைக்கும் மக்களுக்கான மோட்டார் வண்டிகள் என ஏராளமான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செம்மொழி நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நின்று

# அடித்தட்டு மக்கள் ஏற்றம்பெற உறுதியோடு உழைப்போம்!

### சென்னையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூன் 11 -**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாள், 'முத்தமிழறிஞரின் செம்மொழி நாள்' என்ற பெயரில், மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் பிரமாண்டமாக நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை தீவுத்திடல், பின்னி மில் மைதானம் ஆகிய இடங்களில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவற்றில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**விழாவில், ஆட்டோ ஓட்டும் தோழர்களுக்கு புதிய ஆட்டோக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரத்தோடு கூடிய வண்டிகள், கழக மகளிருக்கு ஸ்கூட்டர்கள், சிற்றுண்டி உணவகம் நடத்த வண்டிகள், மோட்டார் வண்டிகள் என ஏராளமான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

அப்போது அவர், ``செம்மொழி நாயகர் கலைஞர் அவர்கள் வழியில் நின்று, விளிம்பு நிலை அடித்தட்டு மக்கள் ஏற்றம் பெற என்றும் உறுதியோடு உழைப்போம்" என்று குறிப்பிட்டார்.

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

**செம்மொழி நாள்**

கலைஞரின் பிறந்தநாள், செம்மொழி நாள் என்று கழகத் தலைவர் அவர்கள் இந்த வருடம் ஜூன் 3-ஆம் நாளைக் கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தார். பொதுவாகவே, அண்ணன் சேகர்பாபு அவர்கள் வருடம் முழுக்க ஏதாவது ஒரு நிகழ்ச்சியை நடத்திக்கொண்டே இருப்பார். இந்த முறை செம்மொழி நாளை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, அதற்கு என்னை அழைத்து, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதற்கான வாய்ப்பை கொடுத்தமைக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டிலிருந்து கிளம்பும்போது ஒருவிதமான சோர்வுடந்தான் கிளம்பினேன். இருந்தாலும், எப்போது இந்த சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வருகை தந்தாலும் உங்களின் வரவேற்பு, உற்சாகம், சிரித்த முகம், எழுச்சி இவற்றை எல்லாம் பார்க்கும்போது எனக்குள் தானாக ஒரு புத்துணர்ச்சி பிறந்தது மாதிரி ஆகிவிடும். அவ்வளவு சிறப்பாக் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளார். இதற்குப் பிறகு இரண்டு நிகழ்ச்சிகள் உள்ளன. இந்த நிகழ்ச்சி நம் 'திராவிட மாடல் அரசு'க்கு எடுத்துக்காட்டாக, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. இன்னும் சொல்லப்போனால், இதை திராவிட மாடல் நலத்திட்ட நிகழ்ச்சி என்றே சொல்லலாம்.

**'எல்லார்க்கும் எல்லாம்'**

தலைவர் அவர்கள் எப்போது ஆட்சிப் பொறுப்பு ஏற்றாரோ அப்போதே சொன்னார். திராவிட மாடல் அரசு என்றால், என்ன என்று எல்லோரும் அப்போதே கேட்டார்கள். 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதுதான் திராவிட மாடல் அரசு. அனைவருக்கும் அனைத்து விதமான உதவிகளும் செய்யப்படும், இதுதான் திராவிட மாடல் அரசு என்று சொல்லி, அதைச் செய்து காட்டியவர் நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்.

இன்றைய நிகழ்ச்சியில் 50 பேருக்கு ஆட்டோக்கள் வழங்கி உதவி செய்திருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். மூன்று மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர் கொடுத்திருக்கிறார். கழகத்தினர் 25 பேருக்கு ஸ்கூட்டர் வாங்கி கொடுத்து இருக்கிறார். 10 பேருக்கு டிபன் கடை வண்டிகள் கொடுத்து இருக்கிறார். கழகத்தினர் 10 பேருக்கு மீன்பாடி வண்டிகள் வழங்கி இருக்கிறார். துறைமுகம் பகுதியில் உள்ள 600 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புத்தாடை, உதவித்தொகை, அவர்களுக்கு பல் சுவை விருந்து அளித்திருக்கிறார். தீவுத்திடலில் இந்த உதவிகளை எல்லாம் வழங்கிவிட்டு, இந்த நிகழ்ச்சியில் தையல் இயந்திரப் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு தையல் இயந்திரம், கணினிப் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படு கின்றன.

**3, 711 பேருக்கு நலத்திட்ட உதவிகள்**

தையல் வகுப்பு முடித்தவர்கள் 2,608 பேருக்கும், கணினி வகுப்பு முடித்த 1,103 பேருக்கும் சேர்த்து மொத்தம் 3 ஆயிரத்து 711 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அண்ணன் சேகர்பாபு அவர்கள் இன்று வழங்கி இருக்கிறார். இதுதான் திராவிட மாடல் அரசுக்கு எடுத்துகாட்டாக இருக்கின்ற நலத்திட்ட விழா. ஒவ்வொருவருக்கும் பார்த்துப், பார்த்து செய்து இருக்கிறார். கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு என்ன தேவையோ அதை செய்து இருக்கிறார். மாணவர்களுக்கு என்ன தேவையோ அதை செய்து இருக்கிறார். ஆட்டோ ஓட்டுநர்களுக்கு என்ன தேவையோ அதை செய்து இருக்கிறார். இதுதான் அண்ணன் சேகர்பாபு அவர்களின் சிறப்பு. அவர் எந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்தாலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி செய்வார். அப்படி ஒரு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது.

சென்னை கிழக்கு மாவட்டத்தில் எந்த நிகழ்ச்சி செய்தாலும், சிறப்பாகச் செய்வார். இன்றைக்கு அவரின் சொந்தத் தொகுதியான துறைமுகத்தில் செய்யும்போது கேட்கவே வேண்டாம். தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யும்போது என்னிடம் சொல்வார்கள். சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் எந்தப் பிரச்சினையும் இல்லையாமே? என்ன கேட்டாலும் செய்து கொடுத்து விடுகிறீர்களாமே? நாங்கள் எல்லாம் தொகுதி மாறி வந்து விடுகிறோம் என்று என்னிடம் சில பேர் நகைச்சுவையாகக் கேட்பார்கள். ஆனால், அண்ணன் சேகர்பாபு அவர்களின் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்போது எனக்கு ஒரு விதமாக தோன்றும்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் இருந்து மாறி இந்த துறைமுகம் தொகுதிக்கு வந்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றும். அப்படித்தான் அவர் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்த்துப் பார்த்து செய்கிறார். எனவே, இந்த நேரத்தில் எனது வாழ்த்துகளை, பயனாளிகள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழ்நாட்டின் அரசியல் நிலை**

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்தநாளை இங்கு கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். இன்றைய தமிழ்நாட்டின் அரசியல் நிலைமை என்னவென்று உங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்கள் எல்லாம் நன்கு படித்தவர்கள். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு இருப்பீர்கள், செய்தித்தாள் படித்துக்கொண்டு இருப்பீர்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைக்கு இந்த அரசு நடந்து கொண்டு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். எப்படிப்பட்ட சூழ்நிலையில் நம் முதலமைச்சர் நான்கு வருடங்களுக்கு முன்பு பொறுப்பு ஏற்றார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றார். பொறுப்புக்கு வந்தவுடன் போட்ட முதல் கையெழுத்தே பெண்களுக்கு கட்டணமின்றி பேருந்தில் பயணம் செய்ய விடியல் பயணம் திட்டத்தில்தான் கையெழுத்திட்டார். குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும் என்று ஒன்றாம் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்புவரை படிக்கின்ற குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தினார். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள். இதனால் பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் சதவிகிதம் அதிகரித்து இருக்கிறது.

**கல்வி ஊக்கத்தொகை**

பெண்கள் பள்ளிப் படிப்பு படித்தால் மட்டும் பத்தாது. உயர்கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டத்தை அறிவித்தார் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க எந்த கல்லூரிக்குச் சென்றாலும் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. சென்ற வருடம் ஆண்களும் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று அவர்களுக்கு 'தமிழ்ப்புதல்வன் திட்டம்' மூலமாக அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் மாதந்தோறும் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

12-ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் அடுத்து என்ன படிக்கலாம், கல்லூரி படிக்கும் மாணவர்கள் அடுத்து என்ன வேலைக்குப் போகலாம் என்று அவர்களுக்குப் பயிற்சி தர முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தையும் அறிவித்தார். இன்றைக்கு 'நான் முதல்வன்' திட்டத்தில் பல லட்சம் மாணவர்கள் பங்குபெற்று, அதனால் பயனடைந்து இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டு இருக்கிறார். நம் தலைவர் அவர்களின் இத்தகைய அர்ப்பணிப்புமிக்க மக்கள் பணிகளைப் பார்த்துதான், நாம் 8 வருடமாக போட்டியிடுகின்ற அனைத்துத் தேர்தல்களிலும், தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வெற்றியை மட்டுமே பரிசாக நம் தலைவர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**முக்கியமான கோரிக்கை**

இன்னும் 10 மாதங்களில் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வது எல்லாம். நம் திட்டங்களை எல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த 1-ஆம் தேதி மதுரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூட்டம் நடந்தது. அதில் நம் தலைவர் அவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை வைத்தார்கள்.

கழகத்தின் நிர்வாகிகள் அத்தனைப்பேருக்கும் முக்கியமான ஒரு இலக்கை கொடுத்தார்கள். வரும் ஜூன் 20-ஆம் தேதி ஆரம்பித்து ஜூலை முடிவதற்குள் ஒவ்வொரு ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 சதவிகித வாக்காளர்களை நம் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கை, தலைவர் அவர்கள் நமக்குக் கொடுத்து இருந்தார்.

'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை, நாம் எடுத்துச்செல்ல வேண்டும், செய்துகாட்ட வேண்டும். அண்ணன் சேகர்பாபு அவர்களின் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டம் அந்த முன்னெடுப்பை மிகச்சிறப்பாக செய்து முடிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இங்கு வந்திருக்கின்ற மாணவர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள், இளைஞர்கள், தாய்மார்கள் உங்களிடம் நான் கேட்டுக் கொள்வது கழக அரசின் சாதனைகள், திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும் என்றால், அடுத்து வருகிற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் நம் கழக ஆட்சி 7-வது முறையாக அமைய வேண்டும் என்றால், நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சராக அமர வேண்டும் என்றால், மக்களிடம் கழக அரசின் சாதனைகளை எடுத்துச்சொல்லி, மிகப்பெரிய வெற்றியை நம் கழகத்திற்கும், நம் தலைவர் அவர்களுக்கும் தேடித்தர வேண்டும். அதற்கு நீங்களும் துணை நிற்க வேண்டும்.

எப்படி இந்த அரசும், நம் முதலமைச்சரும் உங்களின் வாழ்க்கையில் துணை நிற்கிறார்களோ, அதேபோல் நீங்களும் இந்த அரசிற்கும், முதலமைச்சருக்கும் பிராண்ட் அம்பாசிடர்களாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் சிறப்புரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றிஅழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ரங்கநாதன், ரவிச்சந்திரன், பகுதி கழகச் செயலாளர்கள் முரளி, ராஜசேகர், சு.வேலு, சுதாகர், கூ.பி.ஜெயின், வாசு, தமிழ்வேந்தன், சாமிகண்ணு, ஐ.சி.எப்.முரளிதரன், நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் நரேந்திரன், மருத்துவர் யாழினி, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், தேவ ஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சாந்தகுமாரி, மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, ஷேக் அப்துல்லா, பரிதி இளம்சுருதி, உமாகாந்த், வரதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், மகேஷ்குமார், சந்துரு, நாதன், பி.கே.மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் பரிமளம், ராஜேஷ் ஜெயின், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் தனசேகர், ஜெகதீஷ், வினோத், பிரபு, வட்டக் கழகச் செயலாளர்கள் சதீஷ்குமார், கவியரசு, பார்த்திபன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

